**செய்தி வெளியீடு எண்:528** **நாள்: 10.08.2017**

# செய்தி வெளியீடு

கடந்த 2016ஆம் ஆண்டு நிகழ்ந்த 71431 சாலை விபத்துகளில் 17218 நபர்கள் உயிரிழந்துள்ளனர். தமிழ்நாடு அரசு சாலை விபத்தினை குறைக்கும் பொருட்டு பல்வேறு சாலை பாதுகாப்பு நடவடிக்கைகள் மேற்கொண்டு வரும் நிலையிலும் 2017ஆம் ஆண்டு ஜூன் மாதம் வரை 33345 சாலை விபத்துக்களில் 8452 நபர்கள் உயிரிழந்துள்ளனர்.

உச்சநீதிமன்ற சாலைப் பாதுகாப்பு குழுவானது வாகனத்தை அதிவேகமாக இயக்குதல், வாகனத்தில் அதிக பாரம் ஏற்றுதல், குடிபோதையில் வாகனங்களை ஓட்டுதல், சிவப்பு விளக்கை தாண்டுதல், வாகனங்களை ஓட்டிக்கொண்டு செல்போனை பயன்படுத்துதல், சரக்கு வாகனங்களில் ஆட்களை ஏற்றுதல் போன்ற குற்றங்களுக்கு ஓட்டுநர் உரிமத்தை தற்காலிகமாகவோஅல்லது நிரந்தரமாகவோ ரத்து செய்ய மாநில அரசுக்கு அறிவுறுத்தியுள்ளது.

அதன்படி மேற்காணும் குற்றங்களுக்கு ஓட்டுநர் உரிமத்தை தற்காலிகமாகவோ அல்லது நிரந்தரமாகவோ ரத்து செய்ய போக்குவரத்து மற்றும் காவல்துறைக்கு உரிய அறிவுரை வழங்கப்பட்டுள்ளது. அதன்பயனாக கடந்த இரண்டு மாதங்களில் 9489 ஓட்டுநர் உரிமங்கள் வட்டாரப் போக்குவரத்து அலுவலர்களால் ஓட்டுநர் உரிமம் தற்காலிக தடை செய்யப்பட்டுள்ளது. எனவே அனைத்து சாலை உபயோகிப்பாளர்களும் சாலை விதிகளை கடைபிடித்து தங்கள் பாதுகாப்பை உறுதி செய்து கொள்ள வேண்டப்படுகிறது. மேலும் போக்குவரத்து மற்றும் காவல் துறை அலுவலர்கள் தங்களது செயலாக்கப் பணிகளை தொடர்ந்து மேற்கொண்டு சாலை பாதுகாப்பை உறுதி செய்ய கேட்டுக் கொள்ளப்படுகிறார்கள்

**வெளியீடு : – இயக்குநர், செய்தி மக்கள் தொடர்புத்துறை, தலைமைச் செயலகம், சென்னை–9**